## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நெல்லையில் இன்று தொடங்குகிறார்!

**த**மிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை இன்று (ஏப்ரல் 3ஆம் தேதி )திருநெல்வேலியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் கட்டமாக இன்று திருநெல்வேலியில் பரப்புரையை தொடங்குகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **03.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **திருநெல்வேலி -** பாளையங்கோட்டை (பொதுக்கூட்டம்) | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம் |
| **04.04.2026 (சனிக்கிழமை)** | | |
| காலை 9 மணி | **நாகர்கோவில்** (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | **சங்கரன்கோயில்** (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |
| **05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| காலை 9 மணி | **விருதுநகர்** (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | **திருமங்கலம்** (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

## மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் நடைபெற்ற தொழிற்சங்கத் தேர்தலில்

# தொ.மு.ச. சார்பாக போட்டியிட்ட மு.இராஜகாந்தம் தலைவராக வெற்றி பெற்றுள்ளார்!

சென்னை, ஏப். 3 -

வடசென்னை திருவொற்றியூர் பகுதியில் உள்ள பெரும் பழமை வாய்ந்த மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தேர்தல் 31.03.2026 அன்று நடைபெற்றது. இதில் இரண்டு அணிகள் போட்டியிட்டன. தி.மு.கழக தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும், தொ.மு.ச. பேரவை செயலாளருமான மு.இராஜகாந்தம் தலைமையில் ஒரு அணியும், NDLF தொழிலாளர் ஒருங்கிணைப்பு அணி சார்பாக தோழர் ப.விஜயகுமார் தலைமையிலும் ஒரு அணியும் என இரண்டு அணிகள் சங்கத்தேர்தலில் போடியிட்டனர்.



இதில் தொ.மு.ச. பேரவை சார்பாக போட்டியிட்ட மு.இராஜ காந்தம் தலைமையிலான அணியின் நிர்வாகிகள் முழுவதும் வெற்றி பெற்றுள்ளனர். அதே போல் மொத்தம் உள்ள செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்பதில் ஏழு செயற்குழு உறுப்பினர்கள் மு.இராஜ காந்தம் அணியை சார்ந்தவர்கள் தான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிற்சங்கத் தலைவராக வெற்றிபெற்றுள்ள மு.இராஜகாந்தம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வடசென்னை பகுதியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற்சங்க பணிகளை செய்து வந்துள்ளார். மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் இதற்கு முன்பும் தொழிற்சங்கத் தலைவராக சங்கப் பணி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற தொழிற்சங்கத் தலைவர் மு. இராஜகாந்தம் அவர்களுக்கு கழக முன்னணியினரும், பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகளும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் இவர் தி.மு.கழகத்தின் தொழிலாளர் அணியின் மாநில துணை செயலாளராகவும், தொ.மு.ச. பேரவை செயலாளர் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறார்.

---

### சீர்காழி (தனி) தொகுதியிலும்

## ம.தி.மு.க. வேட்பாளர் உதயசூரியன் சின்னத்தில் போட்டி!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவிப்பு!

2026, ஏப்ரல் திங்களில் நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி தி.மு.கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றான சீர்காழி (தனி) தொகுதியிலும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இரா.செந்தில்செல்வன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கிறேன்.



**"தாயகம்"**
சென்னை - 8.
01.04.2026.

**வைகோ**
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட
முன்னேற்றக் கழகம்

---

### 4 தொகுதிகளிலும் ம.தி.மு.க. வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவர்!

# வைகோ முடிவை வரவேற்கிறேன்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 3 -

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் ம.தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் முடிவை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேற்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு :-

**ஆருயிர் அண்ணன் வைகோ அவர்கள் பெருந்தன்மையோடு எடுத்துள்ள இந்த முடிவை நன்றியோடு வரவேற்கிறேன்!**

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெல்க!**

**வெல்வோம்_ஒன்றாக!**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




கோவை மாநகர் மாவட்ட கழக அலுவலகத்தில், கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச்செழியன் ஏற்பாட்டில், தேர்தல் பணிகளுக்கான "WAR ROOM" மை கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர், கோவை வடக்கு சட்டமன்ற கழக வேட்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் திறந்து வைத்தார். இதில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம். தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை உள்பட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.